# மாகாணக்கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2025

| | | | | |
|---|---|---|---|---|
| **கத்தோலிக்க திருமறை**<br>**Catholicism** | **Three Hours**<br>**Gr -10** | **14** | **T** | **I,II** |

கவனிக்க

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க .

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

**பகுதி - I**
**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

(1) கத்தோலிக்க திருவிவிலியத்தில் இறை ஏவுதலால் எழுதப்பட்ட நூல்களின் எண்ணிக்கை
1. 66　2. 27　3. 73　4. 46

(2) இஸ்ராயேலர் பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட பின் மீண்டும் தம் சொந்த நாட்டிற்கு வந்து சமய, சமூக புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டது பற்றிக் கூறும் நூல்கள்
1. யூதித்து, எஸ்தர்　3. ரூத், எஸ்தர்
2. எஸ்ரா, நெகேமியா　4. எஸ்ரா, ரூத்

03) புனித பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகம் அல்லாதது
5. பிலமோன்　7. திமோத்தேயு
6. 2 தெசலோனிக்கர்　8. தீத்து

(3) திருவெளிப்பாட்டில் 7, 10 என்ற இலக்கங்கள் தரும் பொருள்கள்
1. பிரபஞ்சம், இஸ்ராயேல்　3. நிறைவு, பிரபஞ்சம்
2. நிறைவு, முழு நிறைவு　4. இஸ்ராயேல், முழு நிறைவு

(4) "உனக்கு நிகராக உனக்கு முன்னே எவரும் இருந்ததில்லை. உனக்கு பின்னே இருக்கப்போவதும் இல்லை". இவ் இறைவார்த்தை குறிக்கும் நபர்
1. ஆபிரகாம்　2. தாவீது　3. மோசே　4. சாலமோன்

(5) நாம் ஞானமுள்ள முறையில் செயற்படுவதென்பது
1. இறைவேண்டலில் நிலைத்திருத்தல்
2. தூய ஆவியின் கொடையைப் பெற்றிருத்தல்
3. நல்லவற்றை மட்டும் தெரிந்தெடுத்து வாழுகின்ற வாழ்க்கை
4. மற்றவர்களை புரிந்து செயற்படுவது

(6) "இது முதல் மானிட மகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்" என இயேசு பதிலளித்த இடம்
1. மூப்பர் சங்கத்தின் முன்　3. ஏரோதின் முன்
2. பிலாத்துவின் முன்　4. சீடர்களின் முன்

(7) இறந்த இயேசுவின் உடலை அடக்கம் செய்ய பிலாத்துவிடம் அனுமதி கேட்டவர்
1. கொர்னேலியு　3. அரிமத்தியா ஊர் யோசேப்பு
2. புனித யோவான்　4. சீரேன் ஊர் சீமோன்

Past Papers Wiki

(8) திருச்சபையில் இணைந்து கொண்ட முதல் புற இனத்தவர்
1. மத்தியா 3. புனித லூக்கா
2. நத்தானியேல் 4. கொர்னேலியு

(9) புனித பவுல் உரோமையில் எந்த பேரரசனின் ஆட்சியின் போது கொல்லப்பட்டார்
1. அகுஸ்துசீசர் 2. நீரோ 3. தீத்துஸ் 4. மக்சிமியன்

(10) "என் ஆட்டுக்குட்டிகளை பேணி வளர்" என இயேசு மூன்று முறை கூறியது
1. புனித யாக்கோபிற்கு 3. புனித யோவானுக்கு
2. புனித பேதுருவிற்கு 4. புனித தோமாவிற்கு

(11) திருச்சபையின் உலகளாவிய பொதுவான தன்மையைக் குறிக்கும் பண்புகளில் ஒன்று
1. ஏகம் 3. கத்தோலிக்கம்
2. பரிசுத்தம் 4. அப்போஸ்தலக்கம்

(12) ஒல்லாந்தர் கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்த காலம்
1. கி.பி 1505 - 1605 3. கி.பி 1658 - 1796
2. கி.பி 1505 - 1658 4. கி.பி 1796 - 1948

(13) முதல் முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டுவந்து கடவுளுக்கு பலி ஒப்புக்கொடுத்தவர்
1. ஆபிரகாம் 2. ஈசாக் 3. யாக்கோபு 4. மெல்கிசெதெக்

(14) இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டதன் நினைவாக கொண்டாடப்படும் விழா
1. பாவப்பரிகாரவிழா 3. பெந்தக்கோஸ்தே விழா
2. பாஸ்கா விழா 4. கூடார விழா

(15) "எவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதனையுமே அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது" எனக்கூறியவர்
1. யோசவ்வாஸ் அடிகள் 3. இயேசு கிறிஸ்து
2. யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் 4. மக்சிமியன் கோல்பே

(16) இயேசு கிறிஸ்து சீடர்களின் பாதங்கழுவுதல் பற்றி குறிப்பிடும் நற்செய்தியாளர்
1. புனித யோவான் 2. புனித மத்தேயு 3. புனித மாற்கு 4. புனித லூக்கா

(17) இஸ்லாமிய பள்ளிவாசலுக்கு சென்ற முதலாவது திருத்தந்தை
1. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் 3. திருத்தந்தை 1ம் பெனடிக்ற்
2. திருத்தந்தை 2ம் யோண்போல் 4. திருத்தந்தை 6ம் சின்னப்பர்

(18) பதுளை மாவட்டத்தில் ஏழை மக்களுக்கு உதவி செய்ய "சுபசெத்கெதர" என்ற அமைப்பை ஏற்படுத்தியவர்
1. பஸ்ரியன் அடிகளார் 3. மைக்கல் றொட்ரிக்கோ அடிகள்
2. டொன் பிரீஸ் அடிகள் 4. தாவீது அடிகள்

(19) எமது நம்பிக்கையின் மூலகர்த்தாவாக விளங்குபவர்
1. ஆபிரகாம் 2. மரியாள் 3. இறைவன் 4. மோசே

(20) இறைவனின் திருப்பெயரை மரியாதையுடன் பாவிக்க வேண்டும் என்பதைக் கூறும் கட்டளை
1. 3ம் கட்டளை 2. 1ம் கட்டளை 3. 2ம் கட்டளை 4. 8ம் கட்டளை

(21) பண ஆசையினால் வியாபாரத்திலும் மேலதிக வேலையிலும் ஈடுபடுதல் எத்தனையாம் கட்டளைக்கு எதிரான பாவம்
1. 1ம் கட்டளை 2. 2ம் கட்டளை 3. 7ம் கட்டளை 4. 3ம் கட்டளை

(22) தம் சகோதர சகோதரிகளிடம் __________ கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்
1. பொறாமை 2. எரிச்சல் 3. தற்புகழ்ச்சி 4. சினம்

(23) ஒரு மனிதரின் இரத்தத்தை எவர் சிந்துகிறாரோ அவரது இரத்தம் வேறொரு மனிதரால் சிந்தப்படும். இது பற்றி கூறும் நூல்
1. தொடக்க நூல் 2. எஸ்ரா 3. நெகேமியா 4. எசாயா

(24) புனித மரிய கொறற்றியை பாவச்செயலுக்கு தூண்டிய போது அதற்கு உடன்படாததால் அவளைக் கத்தியால் குத்தியவன்
1. எட்வேட் 2. அலெக்சாண்டர் 3. தோமஸ் 4. பீறிஸ்

(25) "ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று" எனக்கூறியவர்
1. புனித பவுல் 2. புனித மரிய கொறற்றி

3. இயேசு கிறிஸ்து
4. புனிதஅன்னைதிரேசா

(26) பிறருக்குரியதை அநீதியான முறையில் பெற்றுக்கொள்ளல் எத்தனையாம் கட்டளைக்கு எதிரானது
1. 5ம் கட்டளை 2. 6,9ம் கட்டளை 3. 8ம் கட்டளை 4. 7,10ம் கட்டளை

(27) இறைவன் மனிதனுக்கு அளித்த சொத்துக்களை மனிதன்
1. தனது நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.
2. மேலும் அவற்றை பல மடங்காக உயர்த்த வேண்டும்.
3. எமது வீட்டிலுள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும்.
4. நீதியான முறையில் பயன்படுத்தி பிறருக்கு உதவ வேண்டும்.

(28) இறைவனுக்கு பொய் கூறியவர்களுக்கு பயங்கர தீர்வு கிடைக்கும் என்பதை வெளிக்காட்டும் நிகழ்வு
1. யூதாசின் மரணம்
2. அனனியா சபிராளின் மரணம்
3. புனித பேதுருவின் மனம் வருந்தல்
4. ஏரோதுவின் மரணம்

(29)“அப்படியானால் நீ அரசன்தானா?” என்று இயேசுவிடம் வினவியவர்
1. ஏரோது 2. கயபா 3. அன்னா 4. பிலாத்து

(30) பின்வருவனவற்றுள் எட்டாம் கட்டளைக்கு எதிரான பாவங்களுள் ஒன்று
1. தனது தொழிலை சரியாக நிறைவேற்றாதிருத்தல்
2. பிறரின் பதவிகள், உரிமைகளைத் தட்டிப்பறித்தல்
3. பிறருடைய கருத்தை தனது கருத்தாகக் கூறுதல்
4. பிறருடைய காலத்தை வீணாக்குதல்

(31) ‘திருவழிபாடு’ என்பதற்கு பயன்படுத்தப்படும் கிரேக்கச்சொல்
1. லிட்டர்ஜியா 2. லாஒஸ் 3. எர்கோன் 4. பரூசியா

(32) திருத்தந்தை XII ஆம் பத்திநாதரால் ‘திருவழிபாடு’ பற்றி வெளியிடப்பட்ட சுற்றுமடல்
1. ‘அவனியில் அமைதி’
2. ‘இறைவனின் நடுநிலையாளர்’
3. ‘தொழிலாளர் சாசனம்’
4. ‘இறைவனுக்குப்புகழ்’

(33)தவக்காலத்திலும் பாஸ்கா காலத்திலும் பயன்படுத்தப்படும் நற்செய்தி
1. மாற்கு 2. மத்தேயு 3. லூக்கா 4. யோவான்

(34) ‘பரூசியா’ என்ற கிரேக்கச்சொல்
1. இயேசுவின் பிறப்பைக் குறிக்கிறது.
2. இயேசுவின் உருமாற்றத்தைக் குறிக்கிறது.
3. இயேசுவின் விண்ணேற்றத்தைக் குறிக்கிறது.
4. இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

(35) கிறிஸ்து பிறப்புக்காலத்தில் கொண்டாடப்படும் விழாக்களில் ஒன்று
1. மரியன்னையின் பிறப்பு புரட்டாதி 08
2. மரியன்னை - எலிசபெத் சந்திப்பு வைகாசி 31
3. மரியன்னை இறைவனின் தாய் தை 1
4. மரியன்னையின் விண்ணேற்பு ஆவணி 15

(36) பாஸ்கா காலம் எந்த விழாவுடன் நிறைவடைகிறது
1. கிறிஸ்து பிறப்பு விழாவுடன்
2. பாஸ்கா விழாவுடன்
3. இயேசுவின் காணிக்கை விழாவுடன்
4. பெந்தக்கோஸ்தே விழாவுடன்

(37) பொதுக்காலத்தில் திருப்பலியின் போது குருக்கள் அணியும் ஆடையின் நிறம்
1. பச்சை
2. வெள்ளை
3. சிவப்பு
4. ஊதா

(38) கெத்சமெனி செபத்தில் இடம்பெறாத விடயமாகக் கருதக்கூடியது
1. இறை இயேசுவின் உண்மையான மனிதத்தன்மை
2. இறைவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள நெருங்கிய உறவு
3. இயேசுவின் திருப்பாடுகள்
4. இயேசுவின் புதுமைகள்

PAST PAPERS WIKI

Past Papers Wiki

(39) கெத்சமனி செபம் மூலம் எமக்கு தரப்படும் இறைசெய்தி
1. நாளாந்தம் திருப்பலிக்கு செல்ல வேண்டும் என்பது.
2. எல்லோருடனும் சேர்ந்து செபிக்க வேண்டும் என்பது.
3. குடும்பமாக எப்போதும் செபிக்க வேண்டும் என்பது.
4. எமது வாழ்க்கையின் அனைத்து முக்கியமான சந்தர்ப்பங்களையும் செபத்துடன் ஆரம்பிக்க வேண்டும் என்பது.

(40x 1=40 புள்ளிகள்)

## பகுதி 2

**பின்வரும் வினாக்களில் முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களிற்கு விடை தருக**

(1)

1) இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய சான்றுகள் இரண்டு தருக?
2) திருத்தொண்டர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களிடம் காணப்பட்ட பண்புகள் இரண்டு தருக?
3) இஸ்ராயேலர் எரி பலிக்குப் பயன்படுத்திய பலிப் பொருட்கள் இரண்டு தருக?
4) புனித அன்னை திரேசா பெற்ற இரண்டு விருதுகளைக் குறிப்பிடுக?
5) எதிர்நோக்கிற்கு எதிரான பாவங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
6) புனித பவுல் தன் கைப்பட எழுதிய திருமுகங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
7) காணிக்கை ஒப்புக்கொடுப்பதன் நோக்கங்கள் இரண்டு தருக?
8) கீரியே, குளோரியா குறிக்கும் பொருள் யாது?
9) கத்தோலிக்க திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சபைகளுள் இரண்டைக் குறிப்பிடுக?
10) பரிசுத்த வாரத்தின் முக்கியமான திருவழிபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக?

(10x2=20 புள்ளிகள்)

(2)

1) எபிரேய ஞானத்தின் பிரிவுகள் இரண்டைக் குறிப்பிடுக?
2) ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
3) உமது வாழ்வில் ஞானமுள்ள விதத்தில் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

(3)

1) திருச்சபையின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக?
2) ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மக்கள் அனுபவித்த இன்னல்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3) புனித யோசவ்வாசின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக்கொண்ட நல்ல பண்புகள் ஐந்தைக் குறிப்பிடுக

(2+3+5=10 புள்ளிகள்)

(4)

1) நற்கருணையின் சிறப்பியல்புகள் இரண்டு தருக?
2) திருப்பலியின் ஆரம்பத்தில் காணப்படும் மேன்மைமிகு அடையாளங்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3) உமது பங்கில் திருவழிபாட்டினை கருத்துள்ளதாக செயற்படுத்த நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் ஐந்து தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

(5)

1) கருச்சிதைவு ஏன் மாபெரும் கொலைக் குற்றமாகும்?
2) பிள்ளைகள் மட்டில் பெற்றோரின் கடமைகள் மூன்றைக் குறிப்பிடுக?
3) சமூகத்தில் நீர் நல்லொழுக்கம் உள்ள பிள்ளையாக வாழ நீர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

(6)

1) உன்னத குருவின் வேண்டுதலில் உள்ளடக்கப்படும் பகுதிகளில் இரண்டைக் குறிப்பிடுக?
2) இயேசு இறுதி இராவுணவின் போது நிறைவேற்றிய செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3) ஒரு கிறிஸ்தவ மாணவராக கிறிஸ்தவ ஒற்றுமைக்காக உம்மால் முன்னெடுக்கக் கூடிய செயற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

(7) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

1. தவக்காலம்
2. கருக்கலைப்பு
3. பழைய ஏற்பாட்டுப் பலிகள்
4. மரிய கொறற்றி

(2x5=10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library